தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

விலை ரூ. 15/– மலர் 20 - இதழ் 04 – ஆகஸ்ட் 2018 | Price : Rs. 15/- Vol : 20 - Issue : 04 - August 2018

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ DEPARTMENT

72வது சுதந்திர தின விழா

தூய்மை கணக்கெடுப்பு 2018 பணி மற்றும் தூய்மைக் கணக்கெடுப்பு சின்னத்தினை தொடங்கி வைத்தல்

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. ஜா. சம்பத் அவர்கள் மற்றும் முதன்மை கணினி மேலாளர் திரு. காந்தி காளிதாசன் ஆகியோர் 01.08.2018 மற்றும் 02.08.2018 ஆகிய இரண்டு நாட்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆய்வின் முதல் நாளில் e-mathi முன்னோட்ட செயல்பாட்டிற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் e-mathi Portal-ல் கிராம அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் அனைத்து செயல்பாடுகளும், கணினி மயமாக்கம், e-mathi மென்பொருளின் செயல்பாடுகளும் ஆய்வு செய்யப்பட்டன. மேலும் நல்லவன்பாளையம் ஊராட்சியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் நிர்வாகிகள் மற்றும் கணக்காளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வாங்க மானியமும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி பார்வையிடப்பட்டது. பின்னர் அனைத்து களப்பகுதி வழிநடத்துநர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஆய்வின் இரண்டாம் நாளன்று, தேசிய நகர்ப்புற வாழ்வாதார சமூக அமைப்பாளர் களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 30 பயனாளிகளுக்கு ரூ. 30,50,00/- மதிப்பிலான வங்கி நேரடி மற்றும் மானியக் கடன்களுக்கான காசோலைகள் வழங்கப்பட்டது. e-mathi மென்பொருள் மூலம் Online வழியாக வங்கி கடன் ஒப்புதல் பெறப்பட்டு, நாயுடுமங்கலம் இந்தியன் வங்கி மூலம் மருத்துவம்பாடி ஊராட்சி கூட்டமைப்பிற்கு ரூ. 18 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

இந்த ஆய்வுகளின் போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

உள்ளே...

வெந்தயக் கீரை சப்பாத்தி 12

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மாவட்ட செய்திகள் 09

72வது சுதந்திர தின விழா கொண்டாட்டம் 05

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 13

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 27

சட்டீஸ்கர் மாநிலத்தில் கள ஆய்வுப் பயணம் 33

பெண்களுக்குத் தென்னை மரம் ஏறும் பயிற்சி 27

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சாதனைகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் செயல் பாடுகள், வெற்றிக் கதைகள், பயனுள்ள செய்திகள், மருத்துவக் குறிப்புகள் என பெண்களுக்குத் தேவையான அனைத்தும் முற்றத்தில் உள்ளன.

திருமதி. சரஸ்வதி நல்லத்தம்பி,
தங்கநிலா மகளிர் சுய உதவிக் குழு,
மேல் குந்தா, நீலகிரி மாவட்டம்

தமிழகத்தை திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத மாநிலமாக மாற்றும் 'முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்' குறித்த செய்திகள் மாதந்தோறும் முற்றம் இதழில் சிறப்பாக வெளியிடப்படுகின்றன. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல் பாடுகள் குறித்த செய்திகளும் சிறப்பாக உள்ளன.

திருமதி. காயத்திரி செல்வராஜ்,
திருமகள் மகளிர் சுய உதவிக் குழு,
ஊத்துக்குளி, ஈரோடு மாவட்டம்.

பெண்கள் எதையும் சாதிப்பார்கள் என்பதற்கு சான்றாக உள்ள சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளை முற்றம் இதழில் சிறப்பாக வெளியிடப்படுகிறது. மேலும் பல்வேறு துறைகளின் சார்பாக சுய உதவிக் குழுக்களுக்கு கிடைக்கும் பயன்கள் குறித்தும் சிறப்பாக வெளியிடப்பட்டு வருகிறது.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
உமையாள்புரம் ஊராட்சி கூட்டமைப்பு,
உமையாள்புரம், தஞ்சாவூர் மாவட்டம்.

தமிழக கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை சூரையாடிய சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சுனயமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல் பாடுகள் குறித்த கட்டுரைகள் எங்களுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
அலைகள் மகளிர் சுய உதவிக் குழு,
நாகூர், நாகப்பட்டினம் மாவட்டம்.

இப்படிக்கு



மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்

மலர் 20 – இதழ் 04 – ஆகஸ்ட் 2018 – விலை ரூ. 15/-

■ கௌரவ ஆசிரியர்
ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர் (கூடுதல் பொறுப்பு),
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

■ பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

■ நிர்வாக ஆசிரியர்கள்
ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜா. ஆனி மேரி சுவர்ணா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். ஜானகி,
டி.ஆர்.ஓ. / பொது மேலாளர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

■ ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

■ பொறுப்பாசிரியர்
சு, மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

■ துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

■ முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

■ பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

■ கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

ஆசானை போற்றும் தமிழ் பண்பாடு...

அன்புள்ள வாசகர்களுக்கு,

இந்திய கலாச்சாரம் உலகில் அனைவராலும் போற்றப்படக் கூடியது. குறிப்பாக தமிழர்களின் பண்பாடும் உலகளவில் பேசப்படும் ஒரு சிறந்த பண்பாடாக விளங்குகிறது.

தமிழ் சமூகம் சாதிகளுக்கு அப்பாற்பட்டு விருந்தோம்பல், கலை உணர்வு, அரசியல் நாகரீகம், சகிப்புத் தன்மை, பெண்களை போற்றுவது போன்ற சிறந்த பண்பாடுகளைக் கொண்டதாகும். இவையாவும் பாரம்பரியமாக தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கலாச்சாரமாகும். கற்பிக்கின்ற ஆசான்களை கடவுளாக மதிப்பது மற்றொரு பண்பாடாகும்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு கல்வி வளர்ச்சியானது வியக்கத்தக்க அளவில் உள்ளது. கல்வியை மக்களிடையே கொண்டு செல்வதில் ஆசிரயர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். ஆசிரியர்கள் தங்களை அரசு ஊழியர்கள் என்று அடையாளப் படுத்திக் கொள்வதை விட, சமூக சிற்பிக்களாக தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்வதில் பெருமை அடைகின்றனர்.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் இரண்டு வகையில் சமுதாயத்தில் அந்தஸ்த்தை பெறுகின்றனர். ஒன்று பிறப்பினால் கிடைப்பது, மற்றுறொன்று தாங்கள் சாதித்த சாதனைகளால் கிடைப்பது. சாதனைகளால் அந்தஸ்த்தையும் புகழையும் பெற்றவர்களின் பின்னால் அவர்கள் அந்த நிலையினை அடைய உறுதுணையாக இருப்பதில் ஆசிரியர்களின் பங்கு மிகப் பெரியதாகும். இதனால் தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என வரிசைப்படுத்தும் போது தெய்வத்திற்கு முன்னால் குருவை வைத்துள்ளனர் என உணர முடிகிறது.

அறிவுக் கண்களைத் திறந்து, பல்வேறு திறன்களை வளர்த்து, தன் ஒழுக்கத் தினையும், சமூகப் பண்புகளையும் உள்வாங்க செய்யும் ஆசிரியர் பெருமக்களின் பணி போற்றத்தக்கதாகும். இவ்வகையில் ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படும் ஆசிரியர் தினமானது முக்கியத்துவம் பெறுகிறது.

கட்டமைப்புகளையும், தொழில் வளர்ச்சியையும் உருவாக்குவது மட்டுமே நாட்டை கட்டி எழுப்பிவிடாது. அறிவுத் திறனைக் கொடுக்கின்ற கல்வியும் இதற்கு மிக முக்கியப் பங்கை அளிக்கிறது. இத்தகைய கல்வியை சாதி, மத, மொழி, இன பேதமின்றி அனைவருக்கும் கொடுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு ஆசிரியர் தின நல் வாழ்த்துகளை முற்றம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

72வது சுதந்திர தின விழா

சென்னை கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தேசியக் கொடி ஏற்றி விருதுகள் வழங்கினார்கள்

நம் நாட்டின் 72வது சுதந்திர தினவிழா நாடு முழுவதும் வெகு விமரிசையாகவும், உற்சாகமாகவும் கொண்டாடப்பட்டது. சென்னை, தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விழாப் பேருரை நிகழ்த்தினார்.

சென்னை தலைமைச் செயலகம் வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, தலைமைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். பின்னர் முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, திறந்த ஜீப்பில் சென்று அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டார்.

அதைத் தொடர்ந்து சென்னை கோட்டை கொத்தளத்தில் உள்ள கம்பத்தில் மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்து விழாப் பேருரையாற்றினார். பின்னர் அங்கு போடப்பட்டிருந்த பந்தலில் அமர்ந்திருந்த மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, அண்ணா பல்கலைக் கழகத்தின் வான்வெளி ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த தக்ஷா குழுவுக்கு டாக்டர் அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. இந்த விருதை அண்ணா பல்கலைக் கழகத்தின் எஸ். தாமரைசெல்வி, கே. செந்தில் குமார், சி.யு. ஹரி, ஏ. முகமது ரஷீத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், பெரிய கல்லாறைச் சேர்ந்த திருமதி. முத்துமாரி, தன் மகளைத் தாக்கிய சிறுத்தைப் புலியை தனி ஆளாக நின்று விறகுக் கட்டையால் தாக்கி விரட்டினார். அதற்காக அவருக்கு துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட்டது.

தமிழக அரசுத் துறைகளில் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தியதற்கு நல் ஆளுமை விருதுகளை பதிவுத் துறை, உணவுப் பொருள் வழங்கல் துறை, மாநில சுகாதாரத் துறை ஆகியவற்றுக்கும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் பா. செந்தில்குமாருக்கு சிறந்த மருத்துவருக்கான விருதும், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். பேச்சு மற்றும் காது கேளாதோர் பள்ளி முதல்வர் லதா ராஜேந்திரனுக்கு சிறந்த சமூகப் பணியாளருக்கான விருதும், மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வுப் பணியில் சிறப்பான முறையில் பணி யாற்றி வரும் அறிவாலயம் தொண்டு நிறுவனம், மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் பணிவாய்ப்பு தந்த டெட்டி எக்ஸ்போர்ட் நிறுவனம், மகளிர் நலனுக்காக சிறப்பாகத் தொண்டாற்றி வரும் சென்னை ரிவர் தி பவர் அப் உமன் என்ற தொண்டு நிறுவனத்திற்கும், கோவை இந்திய விடுதலை வீரர்கள் நினைவு நற்பணி மன்றம் நடத்தி வரும் எம். சிவகுமாருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும் சிறுதொழில்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்கிய சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும் விருது வழங்கப்பட்டது. சிறந்த மாநகராட்சியாக திருப்பூர் மாநகராட்சியும், சிறந்த நகராட்சிகளாக கோவில்பட்டி, கம்பம் மற்றும் சீர்காழி ஆகிய நகராட்சிகளும், சிறந்த பேரூராட்சிகளாக ஜலகண்டபுரம், பழனிசெட்டிப்பட்டி மற்றும் பாலக்கோடு ஆகிய பேரூராட்சிகளும் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த சி. பாஸ்கரன் (தேனி), அ. மகேஷ் (கடலூர்), சு. அஷ்வீதா (திருநெல்வேலி) ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

தலைமைச் செயலக கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மக்களவைத் துணைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில்
சுதந்திர தின விழா கொண்டாட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் நம் நாட்டின் 72வது சுதந்திர தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் (கூடுதல் பொறுப்பு) / தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் அலுவலர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திரு. ஜா. சம்பத் அவர்கள், திரு. ஜே. கணேஷ் கண்ணா அவர்கள், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான 'உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும்' திட்டம், 24.02.2018 அன்று சென்னையில் துவக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழாவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உழைக்கும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 04.08.2018 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் கலந்து கொண்டு, நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி ஆகிய பேரூராட்சிகளைச் சேர்ந்த 60 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர மானியத்தினை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

இவ்விழாவில், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. மணி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவர்கள் கலந்து கொண்டனர். ■

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் திரு. அழகு முத்துக்கோன் அவர்களின் 308வது பிறந்த நாளினை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், கட்டாலங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள அவருடைய மணிமண்டபத்தில் 11.07.2018 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் கலந்து கொண்டு, தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 126 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் மற்றும் 20 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அமுதசுரபிநிதி போன்றவற்றை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. ம. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், களப்பகுதி பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சியில் நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் கலந்து கொண்டு, தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகன மானியத்தினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. சி. கதிரவன், இ.ஆ.ப., அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமா மகேஸ்வரி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறைகளின் அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

இராமநாதபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உழைக்கும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 03.07.2018 அன்று மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன் அவர்கள் கலந்து கொண்டு, 600 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகன மானியத்தினை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில், இராமநாதபுரம் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விழுப்புரம் மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் SVEP திட்டத்தின் செயல்பாடுகளை 02.08.2018 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் முதன்மை செயல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள், MSKP ஆலோசகர் திரு. அன்பரசன் அவர்கள் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. சு. சுந்தர்ராஜன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது, உளுந்தூர்பேட்டையிலுள்ள விவேகானந்தா சேவா பிரதிஸ்டான் (VSP)-ல் சமுதாய வள பயிற்றுநர்களுடன் (CRP-EP) கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு, தொழில் முனைவோராக மாறுவது குறித்தும், அதற்கான வாய்ப்புகள், வழிமுறைகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து உளுந்தூர்பேட்டை, ப.கிள்ளனூர் ஊராட்சியில் SVEP பயனாளிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு, உள்ளூரில் கிடைக்கக் கூடிய வளங்களிலிருந்து தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வழிமுறை, தொழில் முனைவோராக மாறுதல், தையல் தொழில் மற்றும் இயற்கை முறையில் காய்கறிகள் விளைவித்து விற்பனை செய்தல் போன்றவை குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ■

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குதல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடன் வழங்கும் நிகழ்ச்சி 18.07.2018 அன்று நாகர்கோவில் SGS டிலைட் ஹாலில் நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 111 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்தியன் வங்கி மூலம் நேரடிக் கடனை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை அவர்கள், இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் திரு. சி. ஆர். கோபி கிருஷ்ணன் அவர்கள், துணை மண்டல மேலாளர் திரு. டி. சுதாகரன், வங்கிக் கிளை மேலாளர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மகளிர் குழுக்களுக்கு நேரடிக் கடன்

திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 26.07.2018 அன்று நடைபெற்ற வங்கியாளர் குழுக் கூட்டத்தில் 34 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 96 இலட்சம் நேரடிக் கடனை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்வின் போது, திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், வங்கியாளர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வங்கியில் இருந்து பெற்ற கடன் தொகையைக் கொண்டு, இலாபம் தரக்கூடிய தொழில்களை மேற்கொண்டு, பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு அறிவுரை வழங்கினார். ■

மானியத்துடன் கூடிய தொழிற்கடன்

சென்னை மாவட்டத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம், சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் தனிநபர் தொழில் செய்யும் நபர்களுக்கு SEP-I சுய தொழில் திட்டத்தின் கீழ் வட்டி மானியத்துடன் கூடிய தொழிற்கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர மாநகராட்சியின் 4வது மண்டலத்தைச் சேர்ந்த திரு. ரகுராமன் என்ற நபருக்கு, Piaggio பயணிகள் ஆட்டோவினை திருமதி. மகேஷ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். ஆட்டோ வழங்கிட யூனியன் வங்கி மூலம் ரூ. 1.85 லட்சம் வங்கிக் கடன் பெற்று வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சென்னை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சு சிநேகலதா அவர்கள், உதவித் திட்ட அலுவலர் திரு. பி. அருள்ஜோதி உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மகளிர் கல்லூரியில் சுய உதவிக் குழுவினர் அமைத்த மாடித் தோட்டம்

சென்னை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மாடித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி பெற்ற முதன்மை பயிற்றுநர்களைக் கொண்டு, சென்னை, அண்ணாநகர் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரியில் மாடித் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில், சென்னை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின்திட்டஇயக்குநர்திருமதி.சுசிநேகலதாஅவர்கள்,கல்லூரியின்முதல்வர் திருமதி. டாக்டர் ஆர். ரேவதி அவர்கள், உதவித் திட்ட அலுவலர் திரு. கி. முரளி மற்றும் மாடித் தோட்ட முதன்மை பயிற்றுநர்கள் ரேவதி, ஸ்ரீரதி, புனிதா, காஞ்சனா உட்பட பலர் கலந்து கொண்டனர். மாடித்தோட்டம் அமைப்பதற்கான ஏற்பாட்டினை டாக்டர் காயத்திரி மற்றும் மாணவிகள் செய்திருந்தனர். ■

மகளிர் குழுக்களுக்கு வங்கிக் கடன்

பெருநகர சென்னை மாநகராட்சி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2018 – ஜூலை மாதம் வங்கி இணைப்பு மாதமாகத் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இந்தியன் வங்கி புழல் கிளையின் மூலம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் சுய தொழில் செய்யும் 50 நபர்களுக்கு ரூ. 25 இலட்சம் வரை வட்டி மானியத்துடன் கூடிய தனிநபர் கடன் மற்றும் 25 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 38 இலட்சம் மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவித் திட்ட அலுவலர் திருமதி. அ. அமுதா அவர்கள் மற்றும் புழல் கிளை இந்தியன் வங்கி மேலாளர் திருமதி. சாந்தி வாசு ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவிகளை வழங்கினர். ■

பாரம்பரிய மரபுவழி தின்பண்டங்கள் விற்பனை செய்யும் அங்காடி திறப்பு விழா

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி 16.07.2018 அன்று திருவண்ணாமலை தியாகி அண்ணாமலையார் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்பு மூலம் பள்ளி மாணவர்களுக்கான பாரம்பரிய மரபுவழி தின்பண்டங்கள் விற்பனை அங்காடியினை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், திருவண்ணாமலை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்களின் விற்பனை அங்காடி

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாம் நடைபெறும் நாட்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை அங்கு விற்பனை செய்திட சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜி. லதா, இ.ஆ.ப., அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து மக்கள் குறைதீர் முகாம் நடைபெறும் நாட்களில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் அங்காடியினை 16.07.2018 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜி. லதா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, சுழற்சி முறையில் சுய உதவிக் குழுக்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்து வருவாய் ஈட்டிட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. க. அருண்மணி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மண்டல அளவிலான விற்பனைக் கண்காட்சி

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக மண்டல அளவிலான விற்பனைக் கண்காட்சி மதுரை மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் 20.07.2018 அன்று நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 84 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்தனர்.

கண்காட்சியில் கலந்து கொண்ட குழுவின் பெயர், அவைகள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விபரங்கள் பெறப்பட்டதுடன், அனைத்துப் பொருட்களையும் புகைப்படமும் எடுக்கப்பட்டதுடன் சிறந்த பொருட்களாக மதுரை மாவட்டத்திலிருந்து தாமரை, எருக்கு மற்றும் வாழைத்தண்டுத் திரி, பாக்குமட்டை தட்டுகள் போன்றவையும், சிவகங்கை மாவட்டத்திலிருந்து சுடுமண் பானை ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டன.

இக்கண்காட்சியில் சென்னை தலைமை அலுவலகத்திலிருந்து விற்பனை பிரிவு மேலாளர், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு நிதி உள்ளாக்கப் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு நிதி உள்ளாக்கப் பயிற்சி மதுரை மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் 04.07.2018 முதல் 06.07.2018 வரை நடைபெற்றது. இப்பயிற்சியினை மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் துவக்கி வைத்தார். இப்பயிற்சியில் 33 நபர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் அவர்கள், நிதி உள்ளாக்கம் தொடர்பாக சமுதாய ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தார். நபார்டு வங்கி துணைப் பொது மேலாளர், நிதிக் கல்வி ஒருங்கிணைப்பாளர், மாவட்ட தொழில் மைய அலுவலர், ரூட்செட் பயிற்சி மைய இயக்குநர், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அலுவலர்கள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு, ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்தும், வங்கிக் கடன் இணைப்பு குறித்தும் விளக்கமளித்தனர். ■

பாக்கு மட்டையால் பொருளாதார வளர்ச்சி

காஞ்சிபுரம் நகராட்சி 19வது வார்டில் 2009ஆம் ஆண்டு முதல் மீனாட்சி அம்மன் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகின்றது. இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் பல்வேறு தொழில்களை மெற்கொண்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். மேலும் இக்குழுவானது பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 2010ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் பகுதி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக பாக்கு மட்டைத் தட்டு உற்பத்தி செய்யும் சுய உதவிக் குழுவில் இணைந்து பணியாற்றினார்கள்.

இந்தப் பணி அனுபவத்தினைக் கொண்டு, 2015ஆம் ஆண்டு குழுவின் சார்பில் பாக்கு மட்டைத் தட்டுகள் தயாரிக்கும் தொழிலைத் தொடங்கினார்கள். இத்தொழிலுக்குத் தேவையான முதலீடான ரூ. 3 இலட்சத்தை மகளிர் திட்டத்தின் உதவியுடன் வங்கியில் கடனாகப் பெற்று, மூலப்பொருளான பாக்கு மட்டைகள் பெங்களூரு மற்றும் தும்கூர் ஆகிய ஊர்களில் இருந்து வாங்கி, பாக்கு மட்டைத் தட்டுகள் தயாரிக்கும் தொழிலைத் துவக்கினர்.

கோவில் நகரமான காஞ்சிபுரத்தில் பாக்கு மட்டைத் தட்டுகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு உள்ளதால், மீனாட்சி அம்மன் மகளிர் சுய உதவிக் குழு தயாரிக்கும் பொருட்கள் நன்கு விற்பனை ஆகின்றனர். உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்தும் இங்கு வந்த பாக்கு மட்டைத் தட்டுகளை வாங்கிச் செல்கின்றனர். தற்போது இங்கு மாதம் ஒன்றிற்கு பல்வேறு வகையான அளவுகளில் 40 ஆயிரம் பாக்கு மட்டைத் தட்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் ரூ. 4,000/- முதல் ரூ. 5,500/- வரை வருவாய் ஈட்டுகின்றனர்.

தங்களுக்கு பயிற்சி மற்றும் நிதி உதவி வழங்கி, சந்தை வாய்ப்பிற்கு பேருதவியாக இருக்கும் மகளிர் திட்டத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் தங்களின் மனமார்ந்த நன்றியினை இக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இக்குழுவின் சிறப்பான செயல்பாடுகள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனைப்படி, காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாச ராவ் அவர்களின் தலைமையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பத்தி ரிக்கை யாளர்களும் களப்பயணமாக மீனாட்சி அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் பாக்கு மட்டைத் தட்டுகள் தயாரிக்கும் நிலையத்திற்கு வருகை தந்து, பாக்கு மட்டைத் தயாரிக்கும் செயல்பாடுகளைப் பார்வையிட்டுச் சென்றனர். ■

மகளிர் திட்டத்தால் கிடைத்த வாழ்வாதாரம்

தஞ்சாவூர் மாவட்டம், நீலகிரி ஊராட்சி, மானோஜிப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் திருமதி. செல்வராணி என்பவர் கூறும்போது, “கணவனை இழந்த எனக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். மிகவும் வறுமையான நிலையில் இருந்த என்னால் என்னுடைய குழந்தைகளை பள்ளிக்குக் கூட அனுப்ப இயலாத நிலையில் இருந்தேன். அப்போது எங்கள் பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்டது. அதன் மூலம் எனக்கு வழங்கப்பட்ட தனிநபர் கடன் ரூ. 10 ஆயிரத்தைக் கொண்டு, பல்வேறு வகையான பூக்களை வாங்கி கட்டி விற்பனை செய்து வருகிறேன். இதன் மூலம் எனக்கு தினமும் ரூ. 500/- வரை வருவாய் கிடைக்கிறது. என்னால் பிறரை சார்ந்து இல்லாமல் வாழ முடியும் என்ற தன்னம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. எனது வறுமையும் நீங்கி விட்டது. தற்போது நான் பெஸ்ட் மகளிர் சுய உதவிக் குழுவில் சேர்ந்துள்ளேன். என்னுடைய வாழ்க்கையில் பொருளாதார ஏற்றத்தை ஏற்படுத்தி, எனது வாழ்விற்கு ஒளிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் எனது மனமார்ந்த நன்றி’ என்றார் திருமதி. செல்வராணி. ■

வெந்தயக் கீரை சப்பாத்தி

தேவையான பொருட்கள்

கோதுமை மாவு – ஒரு கப், வெந்தயக் கீரை – ஒரு கட்டு, கொத்தமல்லித் தழை – ஒரு தேக்கரண்டி, சீரகம் – அரை தேக்கரண்டி, சோம்பு – கால் தேக்கரண்டி, தனியா தூள் – அரை தேக்கரண்டி, கரம் மசாலா தூள் – 2 சிட்டிகை, மிளகாய் தூள் – ஒரு தேக்கரண்டி, உப்பு – தேவையான அளவு, வெண்ணெய் – ஒரு தேக்கரண்டி, கெட்டித் தயிர் – ஒரு தேக்கரண்டி

செய்முறை

வெந்தயக் கீரையை சுத்தம் செய்து ஆய்ந்து நறுக்கி வைத்துக் கொள்ளவும். கொத்தமல்லித் தழையைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். மற்ற தேவையான பொருட்களை தயாராக எடுத்துக் கொள்ளவும். வாணலியில் ஒரு தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி எண்ணெய் காய்ந்ததும் அதில் சீரகம், சோம்பு போட்டு தாளிக்கவும்.

அதன் பின்னர் சுத்தம் செய்து நறுக்கி வைத்திருக்கும் வெந்தயக் கீரையை தண்ணீரில் அலசி விட்டு, அந்த எண்ணெயில் போட்டு பிரட்டி எடுக்கவும். பிறகு அதில் தனியா தூள், கரம் மசாலா தூள், மிளகாய் தூள், உப்பு போட்டு ஒருமுறை வதக்கவும். பின்னர் அதனுடன் கொத்தமல்லி தழையை சேர்த்து நன்கு கிளறி விட்டு இறக்கி வைத்து விடவும்.

ஒரு பாத்திரத்தில் கோதுமை மாவை எடுத்துக் கொண்டு அதில் வதக்கி வைத்திருக்கும் வெந்தயக் கீரை மசாலாவைப் போடவும். அதன் பின்னர் அதனுடன் வெண்ணெய், தயிர், உப்பு ஆகியவற்றைப் போட்டு, தண்ணீர் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து கொள்ளவும்.

பிசைந்து வைத்திருக்கும் மாவை ஒரு பெரிய எலுமிச்சை பழ அளவு எடுத்து சப்பாத்திக் கட்டையில் வைத்து வட்டமான சப்பாத்தியாகத் தேய்க்கவும். தோசைக் கல்லை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் தடவி அதில் தேய்த்து வைத்திருக்கும் சப்பாத்தியைப் போட்டு, அதன் மேல் சிறிது எண்ணெய் ஊற்றி திருப்பிப் போட்டு வெந்ததும் எடுக்கவும்.

ஆரோக்கியம் நிறைந்த இந்த வெந்தயக் கீரை சப்பாத்தியை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள். ■

பயனுள்ள குறிப்புகள்

கழுத்தில் அணிந்திருக்கும் மஞ்சள் சரடு அழுக்கடைந்து விட்டால், சலவை சோடாவை பஞ்சில் எடுத்து, சுடுநீரில் நனைத்து அதனால் சரடை நன்கு உருவித் துடைத்துக் கழுவினால் பளிச்சென்று இருக்கும்.

கடலை மாவுடன் எலுமிச்சைச் சாற்றை சேர்த்துப் பிசைந்து அதனால் வெள்ளிப் பாத்திரங்களைக் கழுவினால் பளிச்சென்று ஆகிவிடும்.

கல் பதித்த நகைகளில் உள்ள எண்ணெயை நீக்க சாக்பீஸை தண்ணீரில் நனைத்து நகைகள் மீது தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவினால் எண்ணெய் நீங்கிவிடும்.

சிறிதளவு மஞ்சள், நீல டிடர்ஜெண்ட் பவுடர் இரண்டையும் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அதில் தங்க நகைகளைப் போட்டு, சிறிது நேரம் கழித்து அந்த நகைகளை எடுத்து டூத் பிரஷ்ஷால் சுத்தம் செய்தால் நகைகள் பளிச்சிடும்.

தோடு, மூக்குத்தி ஆகியவற்றின் திருகாணிகளை பூண்டுச் சாற்றில் சேர்த்து திருகினால் பொருத்தமாக இருக்கும்.

தோல் பொருட்களில் வாசலினை தேய்த்து உலர விட்டு பிறகு கம்பளி துணியால் துடைத்தால் புதியது போல் இருக்கும். தோல் பொருட்கள் மீது காளான் படிந்து இருந்தால், வெங்காயச் சாறு கொண்டு தடவி துடைத்தால் காளான் நீங்கி தோல் பொருட்கள் பளபளக்கும்.

இரும்பு பொருட்களில் படிந்துள்ள துருவை நீக்க உப்பு கலந்த எலுமிச்சைச் சாற்றை தடவினால் துரு நீங்கிவிடும். அரிவாள்மனை, தேங்காய் துருவி, கத்தி போன்றவைகளில் உள்ள துருவை போக்க இவற்றின் மீது ஒரு சீமை வெங்காயத்தைத் தேய்த்தால் போதும் துரு போய்விடும்.

கத்திகளில் எண்ணெய் தடவி பிளாஸ்டிக் பேப்பரில் வைத்தால் துரு பிடிக்காது. குண்டூசி டப்பாவுல் சிறிதளவு சாக்பீஸ் தூளை தூவி வைத்தால் துருப்பிடிக்காது.

இரும்பு கருவிகள், ஆணிகள் முதலியன வைக்கும் பெட்டிக்குள் ஒரு கரித்துண்டை வைத்தால் இந்தக் கரித்துண்டு காற்றில் இருக்கும் ஈரப்பதத்தை உறிஞ்சிக் கொள்வதால் இரும்புப் பொருட்கள் துரு பிடிக்காது.

விபூதியுடன் மண்ணெண்ணெய் கலந்து தேய்த்தால் பித்தளை விளக்குகளில் உள்ள எண்ணெய் பசை நீங்கும். ■

சுகாதாரம்...!

சதுரத்திற்கு நான்கு பக்கம்...!
பெண்கள் மானம் காக்கும் கழிப்பிடம்...!
திறந்தவெளி மலம் கழிப்பைத் தவிர்க்கணும்...!
நோயில்லாமல் நீண்ட நாள் வாழணும்...!

திருமதி. கலாராணி ஜான் சுந்தரம்,
பிரதிநிதி – 1, எவரெஸ்ட் மகளிர் சுய உதவிக் குழு,
மேல திருமலைராஜபுரம், தஞ்சாவூர் மாவட்டம்.

முழு சுகாதார தமிழகம்
முன்னோடி தமிழகம்

தூய்மை கிராமம் – தூய்மை மாவட்டம் தூய்மை கணக்கெடுப்பு (ஊரகம்) 2018
2018 ஆகஸ்ட் 1 முதல் 31 வரை

முதன் முறையாக மாநிலம் மற்றும் மாவட்டங்களை தூய்மை கணக்கெடுப்பு மூலம் தர வரிசைப்படுத்துதல்

தூய்மை கணக்கெடுப்பு 2018 சிற்றேடு வெளியிடுதல்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், 30.07,2018 அன்று தூய்மை கணக்கெடுப்பு 2018 பணியினை தொடங்கி வைத்து, அதற்கான சின்னத்தினை வெளியிட்டார்கள். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் / ஊரக வளர்ச்சித் துறையின் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அளவிலான பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் சுகாதார ஊக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தூய்மை கணக்கெடுப்பு 2018 ரதம் துவக்கி வைத்தல்

தூய்மை கணக்கெடுப்பு 2018 சின்னம் வெளியிடுதல்

தூய்மை கணக்கெடுப்பு (ஊரகம்) 2018 மாநில அளவிலான தொடக்க விழாவைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தூய்மைக் கணக்கெடுப்பு குறித்த சிறப்பு ஒருங்கிணைந்தக் கூட்டம் மற்றும் மாவட்ட அளவிலான தொடக்க விழா மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரங்கள் கீழ்வருமாறு

காஞ்சிபுரம் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம்

கடலூர் மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டம்

சிவகங்கை மாவட்டம்

ஈரோடு மாவட்டம்

அரியலூர் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

மதுரை மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம்

சேலம் மாவட்டம்

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

सत्यमेव जयते

தூய்மை பாரதம்

வாய்மையே வெல்லும்

தூய்மை கிராமம் - தூய்மை மாவட்டம்

தூய்மை கணக்கெடுப்பு ஊரகம் - 2018

முழு சுகாதார தமிழகம் - முன்னோடி தமிழகம்

2018 ஆகஸ்டு, 1 முதல் 31 வரை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
தமிழ்நாடு

தூய்மை கிராமம் – தூய்மை மாவட்டம்
தூய்மை கணக்கெடுப்பு (ஊரகம்) 2018
2018 ஆகஸ்டு 1 முதல் 31 வரை

முதன்முறையாக மாநிலம் மற்றும் மாவட்டங்களை ஊரக தூய்மை கணக்கெடுப்பு மூலம் தரவரிசை படுத்துதல்

மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், கிராமங்களில் தற்போதுள்ள சுகாதாரத்தின் தரம் மற்றும் சுகாதார கட்டமைப்பில் அடைந்த முன்னேற்றத்தின் அடிப்படையில், இந்தியாவிலுள்ள மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள் தரவரிசை படுத்தப்படவுள்ளது. இதற்கென தனிப்பட்ட கணக்கெடுப்பு நிறுவனம் ஒன்றின் மூலமாக ஊரகப்பகுதிகளில் தூய்மை கணக்கெடுப்பு (ஊரகம்) 2018 (Swachh Survekshan Gramin (SSG) -2018) பணி துவங்கப்படவுள்ளது.

இந்த தூய்மை கணக்கெடுப்பானது, தூய்மை பாரத இயக்கத்தின் விரிவான அளவீடுகள் அடிப்படையில், பொது இடங்களில் தூய்மை குறித்த கணக்கெடுப்பு, பொதுமக்களின் கருத்து அறிதல் மற்றும் தூய்மை பாரத திட்ட செயலாக்கம் போன்றவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் வரிவான மதிப்பீடு (Ranking) செய்யப்படும். மேலும் தூய்மை பாரத இயக்க தகவல் மேலாண்மை கட்டமைப்புகளும் (IMIS), திட்ட செயல்பாடுகளும் மேம்படுத்தப்படும்.

சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு 2018 அக்டோபர் 2ம் நாளன்று விருதுகள் வழங்கப்படவுள்ளது.

நோக்கங்கள் (Objectives)

1. மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களை தூய்மை பாரத இயக்கத்தின் அளவீடுகளின் (Parameters) செயல்திறன் சாதனையின் அடிப்படையில் தரவரிசைபடுத்துதல்
2. முழுமையான தகவல், கல்வி தொடர்பு முனைப்பு இயக்கம் (IEC) மூலம் சுகாதார நிலையினை மேம்படுத்துவதற்கு கிராமப்புற மக்களை பங்கேற்க செய்தல்.
3. தேசிய அளவில் மாநிலங்களுக்கிடையேயும், ஒரு மாநிலத்தில் உள்ள மாவட்டங்களுக்கிடையேயும் தூய்மை பாரத இயக்கத்தின் முக்கிய அளவீடுகளை ஒப்பீடு செய்தல்.

4. தூய்மை பாரத இயக்கத்தினை செயல்படுத்தும் மாவட்டங்களில், தூய்மை குறித்த முன்னேற்றத்தினை கள ஆய்வின் அடிப்படையில், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிராமச் சந்தைகள், வழிபாட்டு தலங்கள் ஆகிய இடங்களில் தூய்மை குறித்து மாதிரி கணக்கெடுப்பு செய்து உறுதி செய்தல்.
5. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளில், திட்ட செயலாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கான பொதுமக்களின் கருத்து அறிதல் மற்றும் பரிந்துரைகள் பெறுதல்.

கணக்கெடுப்பு முறை (Methodology)

மாவட்டங்களை தரவரிசைப்படுத்துதல் மற்றும் சிறந்தவற்றை அங்கீகரித்தல் :

சேவை அளவீடுகளில் அடைந்த முன்னேற்றம், பொது இடங்களில் தூய்மை பற்றிய கணக்கெடுப்பு மற்றும் பொதுமக்களின் கருத்து அறிதல் போன்றவற்றின் தகவல்களின் அடிப்படையில் தரவரிசை செய்யப்படும்.

தூய்மை கணக்கெடுப்பின் போது கீழ்கண்ட முக்கியமான மூன்று காரணிகள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்:

- தூய்மை குறித்த அளவீடுகளில் சேவை அளவிலான முன்னேற்றம் (35%)
  (Service – level progress on sanitation- related parameters (35%)
- பொது இடங்களில் தூய்மை குறித்த நேரடி கள ஆய்வு (30%)
  (Direct observation of sanitation at public places (30%)
- கிராமப்புறங்களிலுள்ள செல்வாக்குள்ள நபர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்து அறிதல் (35%)

  Citizen's Feedback including feedback from key influencers at the village level (35%)



சேவை அளவீடுகளில் அடைந்த முன்னேற்றம் குறித்த தகவல்களை ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் (IMIS) மூலம் தெரிவித்தல்.

சேவை அளவீடுகளில் அடைந்த முன்னேற்றம், மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பிலிருந்து (IMIS) எடுத்துக் கொள்ளப்படும்.

சேவை அளவீடுகள் குறித்த காரணிகள்
தூய்மை பாரத இயக்கத்தின் முன்னேற்றம்

- சுகாதார நிலை (Sanitation coverage)
- திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலை (ODF status)
- திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிகள் ஆய்வு (Verification of ODF villages)
- சேதமடைந்த கழிப்பறைகளை பயன்பாட்டிற்கு மாற்றுதல் (Conversion of dysfunctional toilets)

பொது இடங்களில் நேரடி கள ஆய்வின் மூலம் கவனித்தல்

கணக்கெடுப்பு நிறுவனத்தால், நேரடி களஆய்வு கவனிப்பு (Direct observation) மூலம் சேகரிக்கப்படும் தகவல்களே, பொது இடங்களில் நேரடி களஆய்வு தகவல்களின் அடிப்படையாக அமையும். நேரடி கள ஆய்வில், தகவல்களை சேகரிக்க, கேள்வித்தாள், வரைபடங்கள் மற்றும் கையடக்க பதிவு சாதனங்கள் பயன்படுத்தப்படும். கணக்கெடுப்பு நிறுவனத்தால் படிவங்களில் உள்ள விபரங்களும், நேரடி கள ஆய்வில் கவனிக்கப்பட்ட விபரங்களும் மற்றும் தேவைப்படும் இடங்களில் புகைப்படம் மற்றும் காணொளிக் காட்சிகளும் பதிவேற்றம் செய்யப்படும். மேலும், கணக்கெடுப்பு நிறுவனத்தால் முறையாக கள ஆய்வில் கவனிக்கப்பட்ட விபரங்களின் புகைப்படங்களையும் ஆதாரங்களாக சேகரம் செய்யப்படும்.

பள்ளி

அங்கன்வாடி

ஆரம்ப சுகாதார நிலையம்

கிராமச் சந்தை

வழிபாட்டு தலங்கள்

மதிப்பீட்டிற்கான அளவீடுகள்

கழிப்பறை உள்ளது	கழிப்பறை பயன்பாட்டில் உள்ளது	
கழிப்பறையின் சுத்தம்	குப்பைகள் போடும் நிலை	தேங்கிய கழிவு நீர் உள்ள நிலை

பொதுமக்கள் கருத்து கேட்டல்

பொதுமக்களிடமிருந்து கருத்து கேட்டல் என்பது சுகாதார கணக்கெடுப்பு 2018–ன் முக்கியமான அங்கமாகும். இந்த நிகழ்வில், பொதுக்கூட்டங்கள், நேர்முக உரையாடல், குழுக்கூட்டங்கள், தனிநபர் நேர்காணல், இணையதளம் வழியாக கருத்து அறிதல் மற்றும் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் போன்ற விபரங்கள் பெறப்படும்.

கிராம கூட்டங்கள்

- கிராமத்தின் பொதுவான தூய்மை நிலை
- திடக்கழிவை பாதுகாப்பான முறையில் அகற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகள்
- திரவக்கழிவுகளை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல்.
- திட மற்றும் திரவக் கழிவுகளை கையாளுவதில் புதிய கண்டுபிடிப்புகள்

பொதுமக்களிடமிருந்து கருத்து கேட்டல்

(நேரடியாகவும் மற்றும் இணையதளம் மூலமாகவும்)

- தூய்மை கணக்கெடுப்பு 2018 பற்றிய விழிப்புணர்வு
- தூய்மை பாரத இயக்கம் செயல்படுத்துவதில் ஒட்டுமொத்த திருப்தி
- திடக்கழிவை பாதுகாப்பான முறையில் அகற்ற முயற்சிகள்
- திரவக்கழிவை பாதுகாப்பான முறையில் அகற்ற முயற்சிகள்

முக்கிய செல்வாக்கு மிக்கவர்களின் கருத்து கேட்பு

- தூய்மை கணக்கெடுப்பு 2018 பற்றிய விழிப்புணர்வு
- கிராமங்களில் தகவல் கல்வி தொடர்பு குறித்த செயல்பாடுகள்
- ஊரகப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை வசதிகள் இருத்தல்
- ஊரகப்பகுதிகளில் திரவக்கழிவு மேலாண்மை வசதிகள் இருத்தல்

முழு சுகாதாரத்தை நோக்கி – தகவல்களை பரந்த அளவிலும், விரிவான வகையிலும் கொண்டு செல்லுதல் (Reaching Far and Wide)

ஒருங்கிணைந்த தகவல் திட்டம்

தூய்மை கணக்கெடுப்பு ஊரகம் 2018–ஐ மிகப்பெரிய அளவில் பிரபலபடுத்த மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை இதனை ஒரு முனைப்பு இயக்கமாக துவங்கியுள்ளது.

இந்த தூய்மை ஊரக கணக்கெடுப்பானது தூய்மை பாரத இயக்கம் போன்று, மக்கள் இயக்கமாக சுகாதாரம் தொடர்புடைய அனைத்து தரப்பு மக்களையும் பங்கேற்கச் செய்து கணக்கெடுப்பினை மாபெரும் அளவில் இதுவரை இல்லாத அளவிற்கு முனைப்புடன் கூடிய தகவல் தொடர்பு இயக்கமாக செயல்படுத்தப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு

(16ஆம் பக்க தொடர்ச்சி)

வேலூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டம்

நீலகிரி மாவட்டம்

திருப்பூர் மாவட்டம்

தர்மபுரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம்

கரூர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டம்

திருவாரூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்டம்

நாமக்கல் மாவட்டம்

மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் 28.07.2018 முதல் 30.07.2018 வரை சுகாதார ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

ஊரகப் பகுதிகளில் திறம்பட பணியாற்றி வரும் சுகாதார களப்பணி ஊக்குநர்களுக்கு சுகாதார களப் பணியில் திறன்பாட்டை அதிகரிக்க மூன்று நாள் பயிற்சி 28.07.2018 முதல் 30.07.2018 வரை திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 16 சுகாதார ஊக்குநர்கள் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். ODF-ன் நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உறுதி செய்வது மற்றும் அதற்கான உத்திகள் குறித்து சுகாதார ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

கீழ்க்காணும் தலைப்புகளில் சுகாதார ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- கிராமங்களில் இன்றைய ODF நிலையைக் கண்டறிவது
- சுகாதாரம் குறித்த பழக்க வழக்கங்களை மக்களிடையே மேற்பார்வை செய்தல்
- சுகாதாரம் குறித்து ஊரகப் பகுதி மக்களின் மனமாற்றம் மற்றும் அதன் தற்போதைய நிலைகளை ஆய்வு செய்தல்
- ODF நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உறுதிபடுத்துவது
- கிராம வரைபடங்கள் மூலம் ODF நிலையை சரிபார்த்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம் மற்றும் யுனிசெஃப் நிறுவனம் இணைந்து நடத்திய இந்த பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இந்தப் பயிற்சியில் களப்பணி மூலமாகவும், செயல்முறை விளக்கம் மூலமாகவும் ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். சுகாதார அணுகுமுறையில் முன்னிலைப் பயிற்று நிறுவனமாக விளங்கும் ஃபிட்பேக் பவுண்டேசன் நிறுவனத்தில் இருந்து திரு. பிரேந்திரா மற்றும் அவர் குழுவினர் முதன்மைப் பயிற்றுநர்களாக ஊக்குநர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. லோகநாயகி அவரகள் சிறப்பு விருந்திரனராக இந்தப் பயிற்சியின் துவக்க விழாவில் பங்கேற்று, சுகாதார ஊக்குநர்களுக்கு உத்வேகம் அளித்தார். பயிற்சியின் இறுதி யில் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. ■

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்க ஒருநாள் கருத்தரங்கு

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்கவும், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துவது குறித்து கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் ஒரு நாள் கலந்தாய்வுக் கூட்டம் சென்னை, பனகல் மாளிகையில் உள்ள கூட்ட அரங்கில் 09.08.2018 அன்று நடைபெற்றது. கூடுதல் தலைமைச் செயலர் திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள் இந்த ஒருநாள் கருத்தரங்கை தலைமையேற்று நடத்தினார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக கடன் வழங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிட, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும், பாங்க் ஆப் பரோடா (Bank of Baroda) வங்கியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டன. 25.07.2018 அன்று, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களும், பரோடா வங்கியின் பொதுமேலாளர் அவர்களும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர். இந்நிகழ்வின் போது, கூடுதல் திட்ட இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத் அவர்கள், திரு. ஜே. கணேஷ் கண்ணா அவர்கள், திரு. சி. கே. வீரணன் அவர்கள், வங்கியின் உயர் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

முற்றம் இதழில் வெளியிடப்பட வேண்டிய செய்திகள், வெற்றிக் கதைகள் ஆகியவற்றை பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் முற்றம் இதழிற்கு அனுப்பி வைக்கவும். மேலும் புகைப்படங்களை தெளிவாகவும், நல்ல தரத்துடனும் அனுப்பவும். செல்போனில் எடுக்கப்படும் புகைப்படங்கள், வாட்ஸ்அப்பில் அனுப்பப்படும் புகைப்படங்கள் தெளிவாக இல்லாமல் இருப்பதால் அவற்றை அனுப்புவதை தவிர்க்கவும். புகைப்பட கருவியில் படங்களை எடுத்து அனுப்பவும். – ஆசிரியர், முற்றம் மாத இதழ்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people
to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் துணைத் தலைவர் மற்றும் ஆசிய பசிபிக் பகுதியின் செயலாளர் தமிழகத்திற்கு வருகை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத் தலைமையிடமான ரோமிலிருந்து வருகை புரிந்த துணைத்தலைவர் திரு. டோனர் பிரவுன் மற்றும் ஆசிய பசிபிக் பகுதியின் செயலாளர் திரு. நைஜல் பிரட் ஆகியோர் 30.07.2018 மற்றும் 31.07.2018 ஆகிய நாட்களில் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் திட்டச் செயல் பாடுகளைப் பார்வையிட்டனர். புதுடெல்லி அலுவலகத்திலிருந்து செல்வி. ஓமர் ரஷா மற்றும் திருமதி. மீரா மிஸ்ரா ஆகியோரும் பங்கேற்றனர்.

30.07.2018 அன்று திட்டச் செயல்பாடுகள் குறித்து காணொலி மூலம் கூடுதல் இயக்குநர் திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள் விளக்கினார். அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள மீனவ முன்னேற்ற சங்க பிரதிநிதிகளிடம் குழுவினர் கலந்துரையாடினர். தொடர்ந்து பழவேற்காடு மீன் விற்பனைச் சந்தைக்குச் சென்று மீன் விற்பனையை நேரடியாகப் பார்வையிட்டனர். மீன் விற்பனைச் சங்க உறுப்பினர்கள், மீன் விற்பனைச் செய்யும் மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மற்றும் வருவாய் ஈட்டும் தொழில்களில் பயனாளிகளிடம் அவர்களின் தொழில் வளர்ச்சி குறித்து கேட்டறிந்தனர்.

31.07.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஹாலோ பிளாக் தொழில் கூடம், தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிர், கூட்டுப் பொறுப்புக் குழு (JLC) மூலம் கடன் பெற்று ஐஸ்கிரீம் தயார் செய்யும் நிலையம், சமையல் கழிவின் மூலம் இயங்கும் எரிவாயு கலன் மற்றும் சாய் மகளிர் அழகு நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, பயனாளிகளின் அனுபவத்தைக் கேட்டறிந்தனர்.

இறுதியாக தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து, தங்கள் கள அனுபவங்களை குழுவினர் பகிர்ந்து கொண்டனர்.

அப்போது தமிழ்நாடு அரசு, ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். இத்திட்டம் சிறப்பானதாகவும், புதுமையானதாகவும் உள்ளது எனவும், இதில் கிடைத்த அனுபவத்தை பிற நாடுகளுக்கும் கொண்டு செல்ல உள்ளதாகவும் தலைமைச் செயலாளர் அவர்களிடம் குழுவினர் தெரிவித்தனர். ■

உவர் நீரை குடிநீராக்கும் திட்டம் – ஒரு புதிய முயற்சி

திருவள்ளூர் மாவட்டம், பிரளயம்பாக்கம் ஊராட்சியில் சுமார் 270 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் நல்ல குடிநீர் வசதியின்றியும், குறிப்பாக கோடைக் காலங்களில் குடிநீர் மிக உவர்ப்பானதாகவும் மாறியதால் மிகவும் அவதியுற்றனர். அவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் 2017–18ஆம் நிதியாண்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ. 8,87,640/– மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.

இக்குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 01.07.2018 அன்று பயன்பாட்டுக்கு வந்தது. இதன் பராமரிப்பு பிரளயம்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்ததாகும். குடம் ஒன்றிற்கு ரூ. 5/– வீதம் பயன்படுத்துவோரிடம் வசூலிக்கப்பட்டு, அதன் மூலம் மின்சாரக் கட்டணம், இயந்திர பழுது மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்படும்.

பிரளயம்பாக்கம் ஊராட்சியில் நீண்ட காலமாக உப்பு தண்ணீரை குடிநீராகப் பயன்படுத்தி வந்த நிலையில் இக்குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் நல்ல குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு பிரளயம்பாக்கம் ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்பினர் நன்றியினைத் தெரிவித்தனர். ■

வருவாய் ஈட்டும் தொழில் கடன்
சிறு தொழில் முயற்சியில் மற்றொரு மைல்கல்

காஞ்சிபுரம் மாவட்டம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சியில் வசிக்கும் சித்ரா என்பவர் வருவாய் ஈட்டும் தொழில் கடன் (IGA) மூலம், தான் வாழ்வாதாரம் பெற்ற அனுபவத்தை விளக்குகிறார்.

“நான் நாகாத்தம்மன் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எங்களுடைய சுய உதவிக் குழு சதுரங்கப்பட்டினம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் இணைந்துள்ளது. வருவாய் ஈட்டும் தொழில் (IGA) செய்ய கூட்டமைப்பு கடன் தொகை அளிப்பதாக குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நான் ஏற்கனவே சிறிய அளவில் பால் வியாபாரம் செய்து வந்தேன். எனினும் போதிய வருமானம் கிடைக்காததால் தொழிலை கைவிட்டு விடலாம் என்ற நிலையில் கூட்டமைப்பை அணுகி 02.10.2017 என்று வருவாய் ஈட்டும் தொழில் கடன் பெற என்னுடைய பங்களிப்பாக ரூ. 1,000/– செலுத்தினேன். திட்டக் கடன் நிதியாக ரூ. 9,000/– என மொத்தம் ரூ. 10,000/– கடனாகப் பெற்றேன்.

என்னுடைய தொழிலை தற்போது விரிவுபடுத்தி பால் மற்றும் ஐஸ்கிரீம் ஆகிய பொருட்களை விற்பனை செய்து அதிக வருமானம் ஈட்டுகிறேன். நான் திருமணம் ஆகாத ஊனமுற்றவள் என்பதால் என்னிடம் யாரும் சரியாக பேச மாட்டார்கள். தற்போது தொழில் செய்து என் சொந்த காலில் நிற்பதால் நல்ல மரியாதையுடன் வாழ்ந்து வருகிறேன். நான் வாங்கிய கடன் தொகையை இதுவரை அசல் மற்றும் வட்டியுடன் ரூ. 9,4450/– திருப்பிச் செலுத்தி விட்டேன். செலவுகள் போக மாதாமாதம் ரூ. 2,300/– வரை இலாபமாக கிடைக்கிறது. என்னுடைய வாழ்க்கை தரம் உயர உதவி செய்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றிகள் பல’ என்று குறிப்பிட்டார் சித்ரா. ■

மக்கள் தொடர்பு முகாம் – நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியம், வானவன் மகாதேவி ஊராட்சியில் மக்கள் தொடர்பு முகாம் 11.07.2018 அன்று நடைபெற்றது. இந்த முகாமில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன் அவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். இந்த மக்கள் தொடர்பு முகாமில் வெள்ளப்பள்ளம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு உறுப்பினர்கள் இலவசமாக பொது மக்களுக்கு மனுக்கள் எழுதிக் கொடுத்தனர்.

மேலும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மற்றும் குறுந்தொழில்கள் மூலம் தயார் செய்யப்பட்ட பொருட்களான கருவாடு, படகு உதிரி பாகங்கள், சோப்பு, புடவை டிசைனிங் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. திரும றைக்காடு விவசாயிகள் சங்கம் (TKVK) மூலம் தயாரிக்கப்பட்ட இயற்கை வேளாண் இடுபொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

மாண்புமிகு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. சீ. சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் முகாமிற்க வந்திருந்த அலுவலர்கள் இந்தப் பொருட்களைப் பார்வையிட்டதுடன், சிறப்பான முறையில் இந்த மக்கள் தொடர்பு முகாமினை அமைத்திருந்ததிற்குப் பாராட்டு தெரிவித்தனர். ▪

தமிழ்நாடு மீன் ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் விதிகள் செயல்படுத்துதல் – விழிப்புணர்வு முகாம்.

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு மீன் பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் விதிகள் செயல்படுத்துதல் தொடர்பாக விழிப்புணர்வு முகாம் கன்னியாகுமரி மாவட்ட கடற்கரையோர கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன்வளத்துறை உதவியுடன் 28.06.2018 மற்றும் 29.06.2018 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.

இதில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதரத் திட்ட மாவட்ட செயலாக்க அலுவலர். மீன்துறை உதவி இயக்குநர், கடலோர காவலர் குழுமம், கன்னியாகுமரி மாவட்ட மீனவ சங்கங்களின் சம்மேளனம் – நாகர்கோவில், மீன்வளத்துறை ஆய்வாளர் திரு. பாலகிருஷ்ணன், விஞ்ஞானி முனைவர் லிப்டன், திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. முபாரக், விஞ்ஞானி திரு. லாசரஸ், மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர். வினோத் ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு, சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்த விழிப்புணர்வு முகாமில் தமிழ்நாடு அரசு மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் விதிகள் பற்றி முழுமையாக மீனவர்களுக்கும், மீனவ சங்க பிரதிநிதிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மூலம் கடலில் மீன் பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், அவற்றைப் பயன் படுத்தாமல் இருப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் வானிலை எச்சரிக்கையை எவ்வாறு கையாள்வது என்றும், ஆபத்துக் காலங்களில் மீனவர்கள் பயன்படுத்த வேண்டிய பாதுகாப்பு உபகரணங்கள் பற்றிய விபரமும் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மீன்பிடி உபகரணங்களுக்கு காப்பீட்டின் அவசியம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. ▪

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் விழா

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் உள்ள ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்தியன் வங்கி மூலமாக வங்கி நேரடி இணைப்புக் கடன் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழு கடன் வழங்கும் விழா 18.07.2018 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. பிரதிக் தயாள், இ.ஆ.ப., இந்தியன் வங்கிக் கிளையின் மேலாளர் திரு. ஜோதி கிருஷ்ணன், மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. பிச்சை, நாகர்கோவில் இந்தியன் வங்கிக் கிளையின் முதன்மை மேலாளர் திரு. நந்தகுமார், மாவட்ட செயலாக்க அலுவலர் திரு. உலகநாதன், நிதி ஆலோசகர் மற்றும் கணக்கு அலுவலர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் மாவட்ட ஆட்சியர், இந்தியன் வங்கி கிளை மேலாளர், மாவட்ட செயலாக்க அலுவலர் உட்பட பலர் சமுதாயம் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடைய வேண்டும் எனவும், வேலைவாய்ப்பு பெருகி மக்களின் பொருளாதார நிலை உயர வேண்டும் எனவும் பேசினர்.

அதனைத் தொடர்ந்து சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகளில் உள்ள 12 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடிக் கடன் இணைப்பாக ரூ. 54,00,000/–ம், 58 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு கடனாக ரூ. 1,19,70,000/–ம் என ஆக மொத்தம் ரூ. 1,73,70,000/– மதிப்பிற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் வழங்கி, மக்களின் வாழ்வாதாரம் உயர வாழ்த்துகளைத் தெரிவித்தார். ■

பெண்களுக்குத் தென்னை மரம் ஏறும் பயிற்சி

திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படும் கடற்கரையை ஒட்டியுள்ள கிராமங்களில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. மீன்பிடி தொழில் தவிர தென்னை மூலமும் மக்களுக்கு அதிக அளவில் வருவாய் கிடைக்கிறது. தென்னை மரம் ஏறுபவர்கள் குறைந்த அளவிலேயே உள்ளனர். மேலும் ஆண்கள் மட்டுமே இத்தொழிலை செய்து வருவதால் ஆள் பற்றாக்குறை அதிக அளவில் உள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் கடலோர மீனவ பெண்களுக்கு வருவாய் பெருக்கும் தொழிற் பயிற்சியின் மூலம் (Income Generating Activities Training) தென்னை மரம் ஏறும் கருவி பயிற்சி கடந்த 24.07.2018 அன்று தஞ்சாவூர் மாவட்டம், சுந்தரநாயகிபுரம் ஊராட்சியிலும், திருவாரூர் மாவட்டத்தில் இடும்பாவனம் ஊராட்சியிலும் பெண்களுக்கு வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு எவ்வித பயமோ, கூச்சமோ இன்றி கருவியுடன் துணையுடன் தென்னை மரம் ஏறி பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், எளிதாக மரத்தில் ஏற முடிவதாகவும் பெண்கள் தெரிவித்தனர். தென்னை மரம் ஏறும் கருவி மானியம் மூலம் வழங்கப்பட்டால் தங்களுக்கு சொந்தமான தென்னை மரங்களில் உள்ள தேங்காய்களை அறுவடை செய்வதோடு, தங்கள் ஊரிலும், அருகிலுள்ள ஊர்களிலும் தொழிலுக்குச் சென்று அதிக வருவாய் ஈட்டுவோம் என்றார்.

ரூ. 2,500/– மதிப்புள்ள கருவி ரூ. 1,000/– மானியத்தில் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 12 பெண்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் சுந்தரநாயகிபுரம் ஊராட்சியில் 8 பெண்களும் பயனாளிகளாக பதிவு செய்துள்ளனர். இப்பகுதியில் எவரும் அறிந்திராக இப்பயிற்சியை வழங்கிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு பெண்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். ■

சமுதாய பட்டறிவுப் பயணம் – இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் டி.மாரியூர் மற்றும் நரிப்பையூர் கூட்டு வள மைய் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான சமுதாயப் பட்டறிவுப் பயணம் 25.07.2018 அன்று கன்னியாகுமரி மாவட்டத்துக்கு மேற்கொள்ளப்பட்டது. இந்த சமுதாயப் பட்டறிவுப் பயணத்தில் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

25.07.2018 அன்று காலை 09.30 மணி முதல் நண்பகல் 11.30 மணி வரை கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தா கேந்திர வித்யாலயா சென்று, அங்கு செயல்படும் சாண எரிவாயு அலகு, மண்புழு உரம் தயாரிக்கும் முறை, இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை பூச்சிக் கொல்லிகளான பஞ்சகாவ்யம், மீன் எண்ணை ஆகியவை தயாரிப்பு முறை போன்றவை பார்வையிடப்பட்டது.

நண்பகல் 11.30 மணி முதல் மதியம் 01.00 மணி வரை லீபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு சென்று அக்கூட்டமைப்பில் அனைத்து வகையான பதிவேடுகள் பராமரிக்கப்படும் விபரம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் செய்யப்படும் தொழில்கள் குறித்தும் பார்வையிடப்பட்டது.

பிற்பகல் 02.00 மணி முதல் 04.30 மணி வரை சூரிய சக்தி மூலம் உலர்ந்த மீன்கள் தயாரிக்கும் ஸ்டெல்லா மேரீஸ் திட்ட செயலாக்க அலகு பார்வையிடப்பட்டது. உலர்ந்த மீன்கள் மட்டுமல்லாமல் காய்கறிகளை கொண்டு தயாரிக்கும் சிப்ஸ் வகைகளும் சூரிய சக்தி மூலமாகவே தயாரிக்கப்படுவது பார்வையிடப்பட்டது.

வெயில் அளவு குறைந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் சூரிய சக்தி மூலம் இவை தயார் செய்யப்படும் பொழுது, வெயிலின் அளவு எல்லா காலங்களிலும் அதிகமாக இருக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில் நாம் ஏன் இதனை முயற்சி செய்யக்கூடாது? என்று சில உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். இவை மட்டுமின்றி உரமற்ற காய்கறி விளைச்சல், நெல்லி மற்றும் தேன் ஜாம் தயாரிக்கும் முறையும் கண்டறியப்பட்டது.

சமுதாயப் பட்டறிவு பயணம் மூலம் பிற மாவட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், அங்குள்ள புதிய தொழில் முறைகளை அறிந்து, அவற்றை தங்கள் ஊராட்சியில் எவ்வாறு செயல் படுத்துவது என்ற சிந்தனை பலருக்கு இப்பயணம் மூலம் ஏற்பட்டதால் சமுதாய பட்டறிவுப் பயணத்தின் நோக்கம் வெற்றி பெற்றது என்றே கூறலாம்.■

முதலாம் அரையாண்டுத் திட்டமிடல் கருத்தரங்கு – 2018–19 தூத்துக்குடி மாவட்டம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 2018–19ஆம் ஆண்டிற்கான முதலாம் அரையாண்டுத் திட்டமிடல் கருத்தரங்கம், தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை ஊராட்சியில் 27.07.2018 அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. வ. சார்லெட்மேரி அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி கருத்தரங்கில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத்தை பெருக்குவது தொடர்பான செயல் திட்டமிடல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடு, துயர் குறைப்பு நிதியின் அவசியம், மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு, சுகாதாரக் காப்பீடு, விபத்துக் காப்பீடு, நுண் திட்டமிடல் மற்றும் பெரியதாழை ஊராட்சியில் சுமார் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மீன் வலைப் பின்னும் கூடம் ஆகியவை குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தெளிவாக விளக்கிக் கூறினார். இக்கருத்தரங்கு பொதுமக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது என ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவும், ஊதிய இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டது. ■

மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை

மாற்றுத் திறனாளி மாணவர்கள் படிப்பதற்கு மத்திய சமூக நீதி அமைச்சகம் கல்வி உதவித் தொகையை வழங்குகிறது. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கார்ப்பரேஷன் மூலம் இந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. தொழில் படிப்புகளைப் படிக்கும் பட்ட மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்பைப் படிக்கும் மாணவர்களுக்கு டிரஸ்ட் ஃபண்ட் ஸ்காலர்ஷிப் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு, அரசு உதவிப் பெறும் கல்வி நிறுவனங்களில் உள்ள கல்விக் கட்டணம் மாணவர்களுக்கு வழங்கப்படும். அத்துடன் இளநிலை தொழில் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களின் பராமரிப்புச் செலவுக்காக மாதம் ரூ. 2,500/– வீதம் 10 மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படும். அத்துடன் புத்தகங்கள் மற்றும் ஸ்டேஷனரி செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ. 6 ஆயிரம் வழங்கப்படும். முதுநிலை தொழில் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களின் பராமரிப்புச் செலவுக்காக ரூ. 3 ஆயிரம் வீதம் வழங்கப்படும். அத்துடன் அந்த மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் ஸ்டேஷனரி செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும்.

பார்வையற்றவர்கள் மற்றும் காது கேளாதவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், நிதியுதவி செய்யப்படும். இந்தக் கல்வி உதவித் தொகை பெற விரும்பும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் குடும்ப வரும ானம் ஆண்டுக்கு ரூ. 3 இலட்சத்திற்கும் மேற்படக்கூடாது என்பது விதி. இந்தக் கல்வி உதவித் தொகைக் கோரி கல்வியாண்டில் எப்போது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு : http://www.socialjustice.nic.in/Home

ஒற்றைப் பெண் குழந்தைக்கு கல்வி உதவித் தொகை

சமூக அறிவியல் மற்றும் அறிவியலில் ஆராய்ச்சிப் படிப்பை மேற் கொள்ளும் பெண்களுக்கு இந்த உதவித் தொகையை அறிவித்துள்ளது. கல்வி கொள்கையின் முக்கிய குறிக்கோளாக பெண்கள் கல்வி மேம்பாடு விளங்குகிறது. சமூகத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்க வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் குடும்பத்தில் ஒற்றைப் பெண் குழந்தைக்கான சிறப்பு சலுகையை இந்திய அரசு வழங்கி வருகின்றது.

அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம், கல்லூரி மற்றும் கல்வி நிறுவனங்களில் சமூக அறிவியல் மற்றும் அறிவியலில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவிகள் இந்த உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ரூ. 8 ஆயிரமும், மூன்று மற்றும் நான்காம் ஆண்டுகளில் மாதந்தோறும் ரூ. 10 ஆயிரமும் வழங்கப்படும். சூழ்நிலை அடிப்படையில் ஐந்தாம் ஆண்டும் உதவித் தொகை நீட்டிக்கப்படும். இந்த உதவித் தொகைக்கு விண்ணப்பிப்பவர் குடும்பத்தில் ஒரே பெண் குழந்தையாக இருக்க வேண்டும். முழு நேர படிப்பை மேற்கொள்பவராக இருக்க வேண்டும். உதவித் தொகை பெற ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு யுசிஜி இணையதளத்தை பார்க்கவும். ■

தொகுப்பு – திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்.ஏ., எம்.எட்.,

முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,

அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவஞ்சேரி,

காஞ்சிபுரம் மாவட்டம்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) – தேசிய வள மையம் (NRO)

சட்டீஸ்கர் மாநிலத்தில் கள ஆய்வுப் பயணம்

கடந்த ஜூலை மாதம் 23, 24, 25 ஆகிய தேதிகளில் தேசிய வள மையத்தின் சார்பில், திருமதி. தீபா ராஜ்கமல் (முதன்மை செயல் அலுவலர்), திரு. வீரபாண்டியன் (மாநில வள மேலாளர்), திரு. எஸ். ராஜேஷ் குமார் (உதவி வள மேலாளர்) ஆகியோர் சட்டீஸ்கர் மாநிலத்தில் கள ஆய்வு மேற்கொண்டு, அம்மாநிலத்தில் செயல்படும் கிராம நிறுவனம், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் செயல் பாடுகள் ஆகியவற்றில் மேம்படுத்தப்பட வேண்டிய பணிகள், தேசிய வள மையத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டிய உத்திகள் குறித்து பார்வையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து சட்டீஸ்கர் மாநிலம், ராய்ப்பூர் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களையும், அப்பகுதி மக்களையும் சந்தித்து கலந்தாய்வு மேற்கொண்டனர்.

23.07.2018 அன்று மாநில வள அலுவலர் மற்றும் உதவி வள அலுவலர் ஆகியோர், சட்டீஸ்கர் மாநில திட்ட இயக்குநர் திரு. நிலேஷ், இ.ஆ.ப., அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தேசிய வள மையத்தின் சிறப்பு செயல் பாடுகள் குறித்து விவரித்தனர். பின்னர் திட்ட இணை இயக்குநரை சந்தித்து அடுத்த களப் பயணத்திற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டனர்.

இதனைத் தொடர்ந்து, 24.07.2018 மற்றும் 25.07.2018 ஆகிய தேதி களில் ராஜ்கவுன் மாவட்டம், ராஜ்கவுன் ஒன்றியம், சுர்கி கிராமத்தில் மேற் கொள்ளப்பட்டு வரும் தொழில் செயல்பாடுகள், குழுவாக செய்யும் விவசாயம் மற்றும் அப்பளம் தயாரித்தல் தொழில் நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர். மேலும் பகுதி அளவிலான கூட்டமைப்பின் கூட்டத்தில் பங்கு கொண்டு, அவர்களின் செயல்பாடுகள், குழுக்களை ஆய்வு செய்யும் முறைகள், குழுக்களின் வங்கி இணைப்பு, கிராம அலுவலகத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தனர்.

அதனைத் தொடர்ந்து 25.07.2018 அன்று மாவட்ட அலுவலகம் சென்று அங்குள்ள மாவட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, அவர்களுக்குத் தேவைப்படும் தொழில் நுட்ப உதவிகள் குறித்து விவாதித்தனர்.

தொடர்ந்து, பேரக்கலா என்ற கிராமத்திற்கு சென்று, அங்குள்ள கிராம அலுவலக உறுப்பினர்கள் மற்றும் குழு உறுப்பினர்களிடம் கலந்துரையாடல் மேற்கொண்டனர். குழுக்கள் மூலம் பெண்கள் அடைந்த முன்னேற்றம், முடிவெடுக்கும் திறன் மேம்பாடு, சமூக அக்கறை மற்றும் சமூக பொறுப்புணர்வு மேம்பாடு போன்றவை குறித்து குழுப் பெண்கள் பகிர்ந்து கொண்டதை பதிவு செய்து, அவர்களின் செயல்பாடுகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர் 7 சிறு விவசாயக் குழுக்கள் இணைந்து 75 ஏக்கர் தரிசு நிலத்தில் காய்கறிகள் சாகுபடி, மீன் வளர்ப்பு, நெல் சாகுபடி போன்ற விவசாயப் பணிகள் மேற்கொண்டு வருவதையும், இந்த நிலத்திற்குத் தேவையான தண்ணீரை சுமார் 2 கி.மீ. தூரத்தில் உள்ள ஆற்றில் இருந்து குழாய் மூலம் கொண்டு வருவதையும் பார்வையிட்டதுடன், அவர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வுகளை நிறைவு செய்து ஆய்வுக் குழுவினர் தமிழகம் திரும்பி, தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) – தேசிய வள மையம் (NRO) தலைவர் மற்றும் செயலாளர் அவர்களிடம் தங்களின் ஆய்வு குறித்த விவரங்களைப் பகிர்ந்து கொண்டனர். ■

மேற்கு வங்க மாநிலத்தில்
மீன் ஆய்வுக் கூட்டம் மற்றும் கள ஆய்வுப் பயணம்

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) – தேசிய வள மையமானது (NRO) மேற்கு வங்காள மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, அதன் மூலம் திறன் வளர்ப்புப் பயிற்சி, நிறுவன வளர்ச்சிக்கான பயிற்சி, கற்றல் மையங்களை மேம்படுத்துவதற்கான பயிற்சி ஆகியவற்றை வழங்க TNVRC - NROவின் பத்துப் பணியாளர்களைக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை TNVRC - NRO மூலம் மீள் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். அதன்படி திரு. வீரபாண்டியன் (மாநில வள மேலாளர்), திரு. எஸ். ராஜேஷ்குமார் (உதவி வள மேலாளர்) ஆகியோர் கடந்த 19.07.2018 முதல் 21.07.2018 வரை மேற்கு வங்க மாநிலம், உத்தர்தினஜ்பூர் மாவட்டத்தில் உள்ள ராய்கன்ஜ், சோப்ரா மற்றும் இஸ்லாம்பூர் ஆகிய ஒன்றியங்களுக்கு களப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்தனர்.

இந்த களப் பயணத்தில் மேற்கு வங்க மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் TNVRC - NRO மூலம் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டதுடன், குறைகளைக் களைந்திட பல்வேறு ஆலோசனைகளும் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து உத்தர்தினஜ்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சபயசாச்சி மற்றும் ஆலோசகர் திரு. தருண் தேவ்நாத் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, கிராமங்களின் நிலை, மேற்கொள்ள வேண்டிய பணிகள் போன்றவை குறித்து விளக்கினர். மேலும் நமது பணியாளர்கள் மேற்கு வங்க மாநிலத்தில் சிறப்பாக பணியாற்ற வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079.
Published from (59,500 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்களுடன் ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல் பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட வாழ்வாதார இயக்கத்தில் திட்ட இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் 27.07.2018 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, அனைத்து மாவட்டங்களிலும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள், அடைந்துள்ள இலக்குகள், அடைய வேண்டிய இலக்குகளின் தன்மைகள், அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள நிலைகள், கடன் இணைப்புகள், வேலை வாய்ப்பு பயிற்சிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் போன்றவற்றை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் செயலாளர் திருமதி. சுகந்தி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. பா, செல்வராஜன் அவர்கள், ஜா.சம்பத் அவர்கள், திரு. சி. கே. வீரணன் அவர்கள், இணை இயக்குநர்கள், பொது மேலாளர் மற்றும் அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 2nd Week of the every month